**இப்பாகமுவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இப்பாகமுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினனயும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்குகள் சமர்ப்பித்தலில் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானச் செலவினக் கணக்கின் (நிதிசார் செயற்பாட்டுக் கூற்று) பெறுமதியை முன்னைய ஆண்டின் பெறுமதியுடன் ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நாட்குறிப்புப் பதிவின் மூலம் ரூபா 69,613 தொகையான நூலகப் புத்தகங்களை அகற்றுதல் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நாட்குறிப்புப் பதிவின் மூலம் திரண்ட நிதியத்தில் ''வரவு'' வைக்கப்பட்டிருந்த ரூபா 312,863 தொகையில் அக்கணக்கிற்கு ரூபா 289,063 தொகை மாத்திரமே எடுக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் செலவினக் கடன்கொடுத்தோர் சமர்ப்பித்த கணக்குகளின் பிரகாரம் ரூபா 7,978,264 ஆக இருந்த போதிலும், கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 5,137,169 ஆனமையால் ரூபா 2,841,095 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 100,761,507 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருட காலத்தை விஞ்சிக் காணப்படுகின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,581,104 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,414,140 ஆக இருந்ததுடன் எந்தவொரு காலத்திற்காகவும் வைக்கப்பட வேண்டிய வைப்புக்கள் தவிர செலுத்தக்கூடிய ஏனைய பொறுப்புக்களைச் செலுத்தி விடுவிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 21,169,434 தொகையான 13 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) நானாவித வைப்புக் கணக்கு "வரவு" வைக்கப்பட்டிருந்த ரூபா 23,800 தொகைக்குரிய 17 நாட்குறிப்புப் பதிவுகளுக்குரிய விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,131,517 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,220,563 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 30,910,954 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீண்டெழும் வருமானம் ரூபா 9 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் மீண்டெழும் செலவினம் ரூபா 22 மில்லியனால் குறைவடைந்தமை. நிதி விளைவின் அதிகரிப்பு தொடர்பில் பிரதான காரணமாக இருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

---------------------------------------

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 114,003,287 ஆக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 129,735,065 ஆக இருந்தது. எனினும் வருமானம் சேகரித்தலில் நலிவான நிலைமை காணப்பட்டமையின் காரணமாக முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 45,205,553 தொகையான கிடைக்க வேண்டிய வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 70,622,376 வரை அதிகரித்திருந்தது.

### 2.3.2 ஆதனவரி

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபை எல்லையில் புதிதாக அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு உரிய பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரித்து ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், இறுதியாக புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி கணக்கின் பிரகாரம் ரூபா 5,672,677 நிலுவையொன்று காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்காக சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

-------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தித்தவல்கல 2 ஆம் இலக்க இறைச்சிக்கடை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 231,510 தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் அதில் ரூபா 131,189 நிலுவையொன்று காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இந்த சொத்துக்கள் ரூபா 421,100 தொகைக்கு கேள்வி கோரி இறைச்சி விற்பனை நிலையமாக உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கும் போது உரிய கேள்விதாரரினால் மாடு அறுவைக் கூடத்திற்கான அனுமதிப்பத்திரமும் கோரி சபைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு அறவிட வேண்டிய வாடகையும் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தித்தவல்கல 01 ஆம் இலக்க மற்றும் 02 ஆம் இலக்கம் என்ற 02 இறைச்சிக் கடைகளும் ஒரே பிரதேசத்தில் காணப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் 01 ஆம் இலக்க இறைச்சிக் கடை ரூபா 70,000 தொகைக்கும், 02 ஆம் இலக்க இறைச்சிக் கடை ரூபா 421,100 தொகைக்கும் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தித்தவல்கல 01 ஆம் இலக்க இறைச்சிக் கடையை 02 ஆம் இலக்க இறைச்சிக்கடையுடன் ஒப்பிடும் போது குறைந்த தொகையில் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடந்த அண்மித்த 05 ஆண்டுகளில் ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா 14,000 இனால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டிற்காக சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் போது தீர்மானிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த கேள்வியை 2012 ஆம் ஆண்டின் ஆகக் குறைந்த கேள்வியுடன் ஒப்பீடு செய்த போது 05 சொத்துக்களின் ஆகக் குறைந்த கேள்வி 04 வருடங்களில் குறைதல் அல்லது மிகவும் சிறிய பெறுமதியால் மாத்திரம்

அதிகரிக்கப்பட்டிருந்தமையால் சபையின் வருமானம் வழிகளில் பாதகமாகத் தாக்கமளித்திருந்தது.

(ஈ) வருடாந்த கேள்வியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட 05 ஆதனங்களுக்குரியதாக அறவிடவேண்டியிருந்த ரூபா 357,909 தொகை மற்றும் அதன் அடிப்படையில் அறவிட வேண்டியிருந்த தண்டப்பணமும் கணிப்பிடப்பட்டு உரிய மொத்தத் தொகையையும் அறவிடுவதற்காக 2016 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஏப்ரல் 08 ஆந் திகதி பெறுகைகள் கோரலின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 8,565,263 தொகையான மெல்சிறிபுற பேரூந்து நிலையத்தின் 07 கடைகளை முற்செலுத்தும் முறைமையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் நிபந்தனையின் பிரகாரம் கேள்வித் தொகையில் 50 சதவீதம் 14 நாட்களுக்குள்ளும் மிகுதி 50 சதவீதம் 06 மாதங்களுக்குள்ளும் தவணைப் பணமாகச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் முற்கொடுப்பனவுத் தொகையாக சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 4,280,191 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடைகளுக்குரிய வாடகையை அறவிடுவதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலாச் சபையில் பதிவுசெய்துள்ள ஹோட்டல்களின் வருடாந்த வருமானத்தில் பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த வரித்தொகை அறவிட முடியுமாக இருந்த போதிலும், 06 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையிலான காலத்திற்குரிய வரித் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் தலைமை அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் 736 வியாபார தொழில்முயற்சிகள் அளவில் காணப்பட்டமை இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2016 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு அதில் 432 வியாபார நிறுவனங்கள் மாத்திரம் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தன.

**2.3.5 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மெல்சிறிபுற நகரத்தில் அமைந்துள்ள சமனல சினிமா மண்டபத்திலிருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடவேண்டியிருந்த ரூபா 39,215 தொகையான களியாட்ட வரித் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இப்பாகமுவயில் 13 நடைப்பாதைக் கடைகள் தொடர்பாக கடை வாடகை இறுதித் தடவையாக 1998 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பின்னரான ஆண்டுகளில் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்த வாடகை அறவிடப்பட்டமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய உள்ளபடியான வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(இ) கும்புக்கெட்டே பிரதேசத்தில் 07 நடைபாதைக் கடைகள் மற்றும் அலுவலக வளவில் 03 கடைகள் நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்தக் கடைகளுக்கான வாடகை மதிப்பீடு திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 18,000 ஆகத் திருத்தம் செய்யப்பட்ட வருடாந்த வாடகை 2015 ஆம் ஆண்டின் யூன் மாதம் முதல் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 12,000 ஆகக் குறைக்கப்பட்டமையால் சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 802,877 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 25,286,306 ஆகவும் இருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வறாவல/சீறாதுன்ன, கும்புக்கெட்டே மற்றும் ஹிரிபிட்டிய பொது நூலகங்களில் இடவசதிகளுடன் கட்டிடமொன்று காணப்படாமை, மின்சாரம் இன்மை, புத்தகங்களை ஒழுங்குமுறையாக வைப்பதற்காக போதியளவான இராக்கை வசதிகள் இல்லாமை மற்றும் அகற்றப்பட வேண்டிய பத்திரிகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் இடைக்கிடையே குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் கொகறுல்ல பொது நூலகத்தின் கூரையை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 நவம்பர் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த பழுதுபார்த்தல்களுக்குரிய மதிப்பீடு, அளவிடைப் பத்திரம், நிலஅளவைப் பத்திரம், விலைப்பட்டியல் போன்ற விபரங்கள் விடய எழுதுவினைஞரினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) i. ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு கூறுகளாக்கப்பட்ட மெல்சிறிபுற சிறிபுறவத்த காணி மற்றும் நெகெத்த ஹெலம்பகஹமூலஹேன காணி என்பவற்றின் நிலக் கூறுகளுக்காக மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 1882/22 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணியொன்று கூறிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் வசிப்பிட செயற்பாடுகளுக்கான காணிக் கூறொன்றின் ஆகக் குறைந்த அகலம் 12 மீற்றர் மற்றும் பரப்பளவு 15 பேர்ச் ஆக இருக்க வேண்டிய போதிலும், மெல்சிறிப்புற வத்த காணியின் கூறு இலக்கங்கள் 3 மற்றும் 4 இல் முறையே 13 பேர்ச் மற்றும் 12 பேர்ச் அளவாக இருந்ததுடன் உள்ளக பாதையொன்று வேறொரு வீதிக்கு தொடர்புபடாதிருக்குமாயின் அவ்வாறு தொடர்புபடாத முடிவின் விட்டம் 09 மீற்றருக்கு குறையாத திரும்பும் தளமாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மெல்சிறிபுறவத்த மற்றும் நெகெத்த ஹெலம்பகஹமூலஹேன காணி என்பவற்றின் காணி கூறிடலின் போது அவ்வாறான தளமொன்றின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 02 வருடங்கள் முதல் 22 வருடங்கள் வரையிலான காலப்பகுதியில் 05 நூலகங்களில் இருந்து வெளிவாசகர்களின் எடுத்துச் செல்லப்பட்ட ரூபா 77,077 பெறுமதியான 1029 நூலகப் புத்தகங்களின் நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெல்சிறிபுற சுடலைக் கூடத்தின் இருப்புப் புத்தகத்தின் பிரகாரம் 2016 நவம்பர் 02 ஆந் திகதியில் 790 கி.கிராம் எரிவாயு மீதி காணப்பட்டதுடன், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அந்த அளவு 270 கி.கிராம் ஆனமையால் 520 கி.கிராம் எரிவாயுவின் பற்றாக்குறையொன்று காணப்பட்டது.

**3.3 விளைவற்ற சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 05 வருடம் அளவிலான காலம் முதல் செயற்பாடற்றுக் காணப்படுகின்ற ரூபா 238,800 பெறுமதியான நிழற்பட பிரதி இயந்திரம் மற்றும் ரூபா 31,500 பெறுமதியான லேசர் பிரின்டர் இயந்திரம் என்பன காணப்பட்டன.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது வறாவல/சீறாதுன்ன பொது நூலகத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூடம் தண்ணீர் வசதி இல்லாமையின் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து மூடிவைக்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நாபெட்ட நீர் செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,336,545 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நீர் தாங்கியில் உள்ளிருந்து நீர் கசிந்து செல்கின்றமை 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 02 ஆந் திகதி வரையிலும் அந்த நீர்க் கசிவுகள் நல்ல நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹிரிபிட்டிய உப அலுவலகத்தில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் கராஜில் காணப்படுகின்ற குறைபாடுகள் 2016 நவம்பர் 02 ஆந் திகதி வரையிலும் சீராக்கப்படாதிருந்ததுடன் அக்கராஜில் வாகனங்களை தரித்து வைத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 876,704 தொகையான செலவில் வாடுவாவ வீதி கொங்கிரீட் இடல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 நவம்பர் 02 ஆந் திகதி அவ்வீதியை பௌதீகரீதியில் பரீட்சித்த போது 191’x10’x6” அளவொன்று வீதியின் நடுவில் வெடித்து கொங்கிரீட் விலகிக் காணப்பட்டது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இந்த வீதியின் எஞ்சிய பகுதி கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் அந்தப் பகுதியும் நடுவில் வெடித்துக் கழன்றிருந்தது.

(ஈ) ரூபா 1,148,226 தொகையான மதிப்பீட்டின் கீழ் கொங்கிரீட் இடப்பட்டுக் கொண்டிருந்த மாலகமுவ உடுகொடகம வீதி 2016 நவம்பர் 02 ஆந் திகதிய பரீட்சிப்பின் போது ஒரு சீமெந்து பக்கற்றிற்கு 20 சவல் மணல் மற்றும் 1 ½ அங்குல துண்டு கருங்கற்கள் 30 சவல்களும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 6 அங்குல கொங்கிரீட் தட்டுக்குப் பதிலாக வீதியின் நடுப்பகுதி உயரமாகக் காணப்படுகின்ற வகையில் 4 அங்குல அளவிலான தடிப்பத்தில் உள்ளவாறு கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. மேலும் கொங்கிரீட்டுக்காக மண் இட்டு அமைக்கப்பட்ட சேற்றுடன் கூடிய வயலொன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 55,761 தொகையான 04 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொங்கிரீட் இடலை மேற்பார்வை செய்வதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொடர்புபட்டிருக்கவில்லை.

## 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

இப்பாகமுவ பிரதேச சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக குறித்த வேலைத்திட்டமொன்று மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் பலவருடகாலமாக தனியார் காணிகளில் அகற்றப்பட்டு புதைத்தல் மற்றும் தீ வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 04. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நிலையான சொத்துக்கள் பிழையாக கணக்கீடு செய்தல். நாட்குறிப்புப் பதிவுகள் மற்றும் அதற்குரிய விபரங்கள் உரிய பிரகாரம் பயன்படுத்தப்படாமை. நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறைப் பொறுப்புக்கள் பிழையாக கணக்கீடு செய்தல். வெளிப்படுத்தல் வழுக்கள், வருமானம் பிழையாக கணக்கீடு செய்தல். பதிவேடுகளுக்கும் பட்டோலைகளுக்கும் மற்றும் கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. காசேட்டிலும் கணக்கேடுகளிலும் மீதிகள் காணப்படாமை. பென்சிலால் பதிந்திருந்தமை. பதிவுகள் டிபெக்ஸ் இட்டு அழிக்கப்பட்டிருந்தமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை. பெறவேண்டிய நிலுவை மீதியை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. நீண்ட காலமாக காணப்படுகின்ற நிலுவை மீதிகள் இனங்காணப்படாமை. |
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்களின் பாவனையின் போது ஏற்பட்ட செயற்திறனின்மைகள். விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை. காணிச் சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் | மதிப்பீடு தயாரித்தலில் வழுக்கள் காணப்பட்டமை பொதுமக்களின் தேவைகள் இனங்காணப்படாமை. செயற்திட்டத்தை அமுல்படுத்தும் சந்தர்ப்பத்தின் போது மேற்பார்வை செய்யப்படாமை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் இன்மை. |
| (உ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு சாதகமான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |